உட்காருங்கள். கவன ஈர்ப்பில் அதிக கேள்விகள் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) ஒரு கேள்விதான் கேட்கலாம், அதற்குமேல் ஒன்றும் இல்லை. உட்காருங்கள். நீங்கள் பேரவை விதி 55-ஐப் படித்துப் பார்த்துவிட்டு, வந்து பேசுங்கள். பேரவை விதி 55-ஐப் படித்துப் பார்க்காமல், திடீர், திடீரென்று எழுந்து நீங்கள் பேசுவதை நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடுகள்) அடுத்த சப்ஜெக்ட்டுக்கு நாம் போய்விட்டோம். உட்காருங்கள். இதில் கிளாரிபிகேஷன் இல்லை.

5. அறிக்கை அளித்தல்

சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுத் தலைவர்.

திரு. ஞா. செந்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அறிவித்த அத்தனை அறிவிப்புகளையும், திட்டங்களையும் நிறைவேற்றி, இன்றைக்கு இருக்கின்ற மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கையினால், விலையேற்றத்தால் மாநில மக்கள் அவதிக்குள்ளாகக் கூடாது என்கிற நோக்கத்திலே, வரியில்லா நிதிநிலை அறிக்கையினைத் தந்து, மத்திய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தமிழகத்திற்குத் தரவேண்டிய நியாயமான உரிமைகளையும், மின்சாரம் முதல் மண்ணெண்ணெய் வரை தர மறுத்தாலும், தன்னுடைய ஆட்சியில் தமிழக மக்கள் எந்தவிதத் துன்பத்திற்கும் ஆளாகக்கூடாது என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலே, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக மக்கள் வாழ்வு மேலும் வளம்பெற, நித்தம், நித்தம் விதி 110-ன்கீழ் ஏற்றமிகு திட்டங்களைத் தந்து, நாளைய பாரதம் எல்லா வளமும் பெற, உலகின் வல்லரசாக இந்தியா உருவாக, பாரதத்தையே வழி நடத்தவிருக்கும்

2013 மே 2] [திரு. ஞா. செந்தமிழன்]

(மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இதய தெய்வம், என்னுடைய ஆசானாய், அன்னையாய், தெய்வமாய் விளங்குகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 5-வது அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2013–2014, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2013-2014 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,446,53,65,000/-, மூலதனக் கணக்கில் ரூ.143,38,39,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 2425, திரு. அ. கணேஷ்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2526, திரு. டி. இராமச்சந்திரன்